**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்/**
**உதவி அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்**

முன்னிலை:- திரு.J.ஜெயசுதாகர், M.Sc., L.L.M.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்
இராமநாதபுரம்.

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ஆம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.299/2022**

(CNR No:TNRM02-005879-2022 )

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | தேவிபட்டிணம் காவல் நிலையம் குற்ற எண்.282/2020. |

**எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | பாண்டிதுரை |
| 3. | த/பெ | : | முருகன் |
| 4. | தொழில் | : | கூலி |
| 5. | முகவரி | : | ஆதிதிராவிடர் காலனி, காரேந்தல், தொருவளூர் போஸ்ட், இராமநாதபுரம் |
| ,6. | வயது | : | 27/2020 |

| | | | |
|---|---|---|---|
| 7. | சம்பவ நாள் | : | 13.06.2020 -ம் தேதி 14.30 மணி |
| 8. | புகார் தேதி | : | 13.06.2020 -ம் தேதி 17.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 21.12.2020 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 21.12.2020ம் தேதி காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 11. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 16.11.2024 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 22.06.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | பிரிவுகள் 279 மற்றும் 304(A) இதச படி |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | பிரிவுகள் 279 மற்றும் 304(A) இதச படி |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.29 16:15:16 +0530

| | | | |
|---|---|---|---|
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | : | முதல் விசாரணை குறுக்கு விசாரணை<br>PW1 – 17.12.2024 11.08.2025<br>PW2 – 17.12.2024 19.05.2025<br>PW3 – 11.08.2025 11.08.2025<br>PW4 – 22.08.2025 22.08.2025<br>PW5 – 22.08.2025 22.08.2025<br>PW6 – 22.08.2025 22.08.2025<br>PW7 – 22.08.2025 22.08.2025<br>PW8 – 17.09.2025 17.09.2025<br>PW9 – 19.06.2026 19.06.2026 |
| 17. | எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1) (b) படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 22.06.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.P.M.முனியாண்டி |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.G.கேசவன் (இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர்) |
| 22. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 29.06.2026 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 29.06.2026 |
| 25. | நீதிபதியின் முடிவு | : | முடிவில், எதிரி பிரிவுகள் 279 மற்றும் 304(A) இ.த.ச படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த வழக்கானது இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் 24.09.2022 ஆம் தேதி CC.No.299/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்ற

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:15:42 +0530

நடவடிக்கை நாள் 04.06.2024ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 29.07.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பு 22.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசுக்காக கற்றறிந்த அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் திரு.P.M.முனியாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கேசவன் (இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர்) அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

கடந்த 13.06.2020ம் தேதி பகல் 14.30 மணியளவில் இவ்வழக்கில் இறந்துபோன நபரான ஹாஜா முகைதீன் என்பவர் சித்தார்கோட்டை சமத்துவபுரம் பஸ் ஸ்டாப் மேற்கு நாகராஜ் வீட்டின் பின்புறம் உள்ள பாலம் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN–65–AC–0522 என்ற எண்ணிட்ட மஹிந்திரா கெஸ்டோ இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது எதிரே அதே சாலையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி TN–65–AE–9419 என்ற எண் கொண்ட TVS ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி ஹாஜா முகைதீன் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி ஹாஜா முகைதீன் என்பவர் நிலைதடுமாறி கீழே விழுந்தில் அவருக்கு தலையில் பின்புறம் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு அதன் விளைவாக ஹாஜா முகைதீன் இறந்துபோக எதிரி காரணமாக இருந்துள்ளார் என்றும் எனவே எதிரி பிரிவுகள் 279 மற்றும் 304(A) இ.த.ச படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும் எதிரி மீது தேவிபட்டிணம் காவல்நிலைய ஆய்வாளரால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து, வழக்கு கோப்பினை சிசி.எண்.299/2022 ஆக இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 கோப்புக்கு எடுத்துள்ளார். பின்பு 04.06.2024 தேதிய இந்நீதிமன்ற நடவடிக்கையின்படி, இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 29.07.2024 அன்று கோப்பிற்கு

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:15:55 +0530

எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச. படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்த பின்னர் வழக்காவணங்களை நன்கு பரிசீலித்து எதிரியிடம் அவர்கள் மீது சுமத்தப்படும் பிரிவுகள் 279 மற்றும் 304(A) இதச படியான குற்றத்தின் சாராம்சம் பற்றி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்தார். எனவே வழக்கின் விசாரணைக்கு வகை செய்யப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 254-ன் படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:**

அ.சா.1 திரு.உவைசுல் ஹரீம் தற்போது சித்தார்கோட்டையில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறார். இந்த வழக்கில் விபத்தில் இறந்துபோன ஹாஜா முகைதீன் என்பவர் அவரது தந்தை. கடந்த 13.06.2020 ம் தேதி காலை 10.30 மணியளவில் அ.சா.1ன் தந்தை ஹாஜா முகைதீன், வீட்டிற்கு மளிகை பொருட்கள் வாங்குவதற்காக வீட்டிலிருந்து TN 65 AC 0544 என்ற மகேந்திரா கெஸ்டோ இருசக்கர வாகனத்தில் சித்தார்கோட்டையிலிருந்து இராமநாதபுரத்திற்கு கோப்பேரிமடம் சென்று பொருட்களை வாங்கிவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக கோப்பேரிமடம் – சித்தார்கோட்டை செல்லும் சாலையில் சமத்துவபுரம் பஸ் ஸ்டாப் அருகிலுள்ள பாலம் அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது மதியம் சுமார் 02.30 மணியளவில் சித்தார்கோட்டையிலிருந்து கோப்பேரி மடம் நோக்கி சென்ற TN 65 AE 9419 என்ற TVS scooty pep இருசக்கர வாகனத்தை எதிரி வேகமாக ஓட்டி வந்து அ.சா.1ன் அப்பா ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். அ.சா.1ன் அப்பாவிற்கு தலையின் பின்புறம், வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. எதிரிக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. அந்த இடத்தில் இருந்த பாலத்திற்கு அருகில் ஜாகிர் உசைன் டீ ஸ்டாலில் நின்றுகொண்டிருந்த அ.சா.1 மற்றும்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:16:12 +0530

அ.சா.2 முஸ்தபா கமால் ஆகியோர் அ.சா.1ன் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதை ஓடி சென்று பார்த்தார்கள். அ.சா.5 ஜாகிர்உசேன் சம்பவத்தை பார்த்தார். அ.சா.3 அசாருதீன் சம்பவம் பற்றி கேள்விப்பட்டார். அ.சா.4 முகமது ரைசுதீன் என்பவருக்கு அ.சா.5 ஜாகிர்உசேன் தகவல் கொடுத்து அங்கு ஆம்புலன்ஸ் அனுப்ப சொன்னதன் அடிப்படையில் அ.சா.4 ஆம்புலன்சுடன் அங்கு சென்று காயம்பட்டு கிடந்த காஜாமுகைதீன் மற்றும் இன்னொரு நபர் ஆகிய இருவரையும் ஆம்புலன்சில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்து பற்றி தகவல் கிடைத்து இறந்துபோன காஜாமுகைதீன் என்பவரின் மகள் அ.சா.6 மஜ்மா பேகம் மருத்துவமனை சென்று தனது தகப்பனாரை பார்த்தார். மதியம் 3.00 மணியளவில் அ.சா.1ன் தந்தை இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். விபத்து சம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்தார்.

5. அ.சா.9 திரு.ராஜ்குமார் சாமுவேல் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆணையராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இதற்கு முன்பு அவர் கடந்த 2020ம் ஆண்டு தேவிப்பட்டினம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றினார். இந்த வழக்கில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.முருகன் என்பவர் 13.06.2020ம் தேதி 16.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த காஜா முகைதீன் என்பவரது மகன் உவைசுல் கரீம் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று 17.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.282/2020 பிரிவுகள் 279, 304(A) இதச படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அதனை அ.சா.9 புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சி இராஜபுதீன் மற்றும் அ.சா.7 அப்துல் கரீம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 வரைபடம் தயார் செய்தார். சம்பவ சாட்சிகளான உவைசுல் கரீம், முகமத் ரைசுதீன், முஸ்தபா கமால், அசாரூதீன், ஷாகீர் உசேன், மஜ்மா பேகம், முகமது இசாக் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகன் என்பவரையும் விசாரித்து

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:16:25 +0530

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 14.06.2020ம் தேதி காலை 06.00 மணி முதல் 07.30 மணிவரை இராமநாதபுரம், அரசு தலைமை மருத்துவமனையின் சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன காஜாமுகைதீன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். இறந்த நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக அ.சா.8 தலைமை காவலர் திரு.உலகநாதன் அவர்களை அலுவல் நியமித்து பிரேத பரிசோனைக்காக இராமநாதபுரம், அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார். அ.சா.8 பிரேத பரிசோதனைக்கு பின்பு பிரேதத்தை உறவினர் வசம் ஒப்படைத்தார். அதன் பிறகு அ.சா.9 பணிமாறுதலாகி சென்றதால் வழக்கு கோப்பினை காவல் நிலையத்தில் ஒப்படைத்து சென்றுவிட்டார். அவருக்கு பின்னர் ஆய்வாளராக பொறுப்பேற்ற தனபால் என்பவர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.12.2020ம் தேதி 17.30 மணிக்கு தேவிப்பட்டிணம் காவல்நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். விபத்து சம்பந்தப்பட்ட TN 65 AC 0522 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா ஸ்கூட்டியையும், TN 65 AE 9419 என்ற பதிவெண் கொண்ட TVS Scooty வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் அவர் பணி மாறுதலாகி சென்றுவிட்டார். அவருக்கு பின் பொறுப்பேற்ற ஆய்வாளர் திருமதி.அனிதா என்பவர் இவ்வழக்கினை 11.07.2021ம் தேதி தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் செந்தில்குமார் மற்றும் இளங்கோ ஆகியோரை விசாரித்து TN 65 AC 0522 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 மற்றும் TN 65 AE 9419 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகிய ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். பிரேத அலுவல் செய்த தலைமை காவலர் உலகநாதன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் முத்தமிழரசி என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:16:37 +0530

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து பிரிவு 313(1)(b) படி கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி வினவப்பட்டபோது அத்தகைய சாட்சியங்களை எதிரி மறுத்தார். தனது பக்கம் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று எதிரி தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **<u>தீர்வு:</u>**

இந்த வழக்கில் சம்பவம் பற்றியும் சம்பவம் குறித்து அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்தது பற்றியும் அரசு தரப்பு வழக்கை அனுசரித்து அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்ததாக அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளார்கள். சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளார்கள். சம்பவம் பற்றி நிரூபிப்பதற்கு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகளை தவிர அரசு தரப்பில் வேறு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எனவே அவர்களது சாட்சியங்கள் அரசு தரப்பில் கூறப்படும் சம்பவத்தை நிரூபிக்கும் விதத்திலும் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டினை நிரூபிக்கும் விதத்திலும் அமைந்துள்ளதா என்று ஆராயப்பட வேண்டும்.

9. சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 தன் முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறியுள்ளபோதிலும் அவர் தன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் விபத்து நடந்து சுமார் 5 நிமிடம் கழித்துதான் தானும் தன் நண்பர்களும் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே அ.சா.1 விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது புலனாகிறது. அதுபோல் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 தன் முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தை தான் நேரில் பார்த்ததாக கூறியுள்ளபோதிலும் அவர் தன் குறுக்கு

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:16:59 +0530

விசாரணை சாட்சியத்தில் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றதாகவும் தானும் தன்னுடன் நின்றுக்கொண்டிருந்த நபர்களும் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்த இடத்திற்கு வந்ததாகவும் கூறியுள்ளார். எனவே அ.சா.2 ம் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது புலனாகிறது. மேலும் அ.சா.5 தன் முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளபோதிலும் அவர் தன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நான் எனது கடையை திறப்பதற்கே நேரமாகிவிட்டதால் கடை திறப்பதில் மும்முரமாக இருந்தேன் என்றும் அப்போது விபத்து நடந்த சத்தம் கேட்டு நான் போனேன் என்றும் கூறியுள்ளார். எனவே அ.சா.5 ம் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது புலனாகிறது. எனவே சம்பவத்தை நேரில் பார்த்ததாக தங்கள் முதல் விசாரணை சாட்சியங்களில் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் அளித்துள்ள சாட்சியங்கள் நம்பத்தகுந்த விதத்தில் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. இத்தகைய சூழ்நிலையில் சம்பவம் நடந்தவிதம் குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்கள் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதி முக்கியத்துவம் பெறுகிறது. அ.சா.1 தன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் என் அப்பா இராமநாதபுரத்தில் இருந்து சித்தார்கோட்டைக்கு செல்லும்போது எதிர்பாராதவிதமாக மாடு ஒன்று குறுக்கே வந்ததால் தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசைக்கு சென்றதால் விபத்து ஏற்பட்டதாகதான் நான் கேள்விப்பட்டேன் என்று கூறியுள்ளார். அதுபோல் அ.சா.2 தன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து நடந்த இடத்தில் ஒரு மாடு குறுக்கே வந்ததால் விபத்தில் இறந்துபோன நபர் கட்டுப்பாட்டை இழந்து தான் வந்த திசையில் இருந்து எதிர் திசையில் சென்று விழுந்ததால்தான் விபத்து நடந்தது என்றால் நான் சத்தம்கேட்டு தான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன் என்று கூறியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரது மேற்படி சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் இறந்துபோன நபர் இருசக்கர வாகனத்தில் வந்தபோது மாடு ஒன்று குறுக்கே வந்ததால் அவர் தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டிருப்பது புலனாகிறது. எனவே சம்பவம் நடந்த விதம் குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அளித்துள்ள மேற்படி சாட்சியங்கள் அரசு தரப்பு

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:17:11 +0530

வழக்கினை முற்றிலும் பாதிக்கச்செய்யும் விதத்தில் அமைந்திருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. ஏற்கனவே கூறப்பட்டுள்ளதுபோல் சம்பவம் நடந்த விதம் பற்றி கூறுவதற்கு சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர் சம்பவம் பற்றி அளித்துள்ள சாட்சியங்கள் நம்பத்தகுந்த விதத்தில் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோர் சம்பவம் பற்றி தாங்கள் கேள்விப்பட்டதாகவே கூறியுள்ளார்கள். எனவே அவர்களது சாட்சியங்கள் ஒரு கேள்விநிலை சாட்சியமாக அமைந்திருப்பது புலனாகிறது. மேலும் சம்பவம் பற்றி நிரூபிப்பதற்கு அரசு தரப்பில் இதர தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எனவே அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பில் கூறப்படும் சம்பவத்தை நிரூபிக்கும் விதத்திலும் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டினை நிரூபிக்கும் விதத்திலும் அமையவில்லை என்று எதிரி தரப்பில் கூறப்படுவது ஏற்கத்தக்க விதத்தில் அமைந்திருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேலும் இந்த வழக்கில் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகள் யாரும் தங்களது சாட்சியங்களில் அன்றைய தினம் விபத்து சம்மந்தப்பட்ட வாகனத்தை எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தார் என்றோ அதன் காரணமாக இறந்துபோன காஜா முகைதீன் என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றோ எதுவும் கூறவில்லை. எனவே அவர்களது சாட்சியங்கள் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டின் வகையங்களை ஈர்க்கும் விதத்திலும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எனவே இவ்வாறான சூழ்நிலையில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 ன் சாட்சியமும், இறந்துபோன நபரின் பிரேத பாதுகாப்பு அலுவல் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.8 சார்பு ஆய்வாளரின் சாட்சியமும் வழக்கு பதிவு மற்றும் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.9 ஆய்வாளரின் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்விதத்திலும் வலுசேர்க்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:17:22 +0530

14. எனவே மேற்கண்ட காரணங்களால் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. முடிவில், எதிரி பிரிவுகள் 279 மற்றும் 304(A) இ.த.ச படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:17:31 +0530

உதவி அமர்வு நீதிபதி,
தலைமை குற்றவியல் நடுவர்
இராமநாதபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

1. அ.சா.1. திரு.உவைசுல் ஹரீம் (புகார்தாரர்)
2. அ.சா.2. திரு.முஸ்தபா கமால்
3. அ.சா.3 திரு.அசாரூதின்
4. அ.சா.4 திரு.முகமது ரைசுதீன்
5. அ.சா.5 திரு.ஜாகீர் உசேன்
6. அ.சா.6 திருமதி.மஜ்மா பேகம்
7. அ.சா.7 திரு.அப்துல் கரீம்
8. அ.சா.8 திரு.உலகநாதன் (தலைமை காவலர்)
9. அ.சா.9 திரு.ராஜ்குமார் சாமுவேல் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 13.06.2020 | புகார் மனு |
| 2. | அ.சா.ஆ.2 | 13.06.2020 | பார்வை மகஜர் |
| 3. | அ.சா.ஆ.3 | 13.06.2020 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | 13.06.2020 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | 14.06.2020 | பிரேத விசாரணை அறிக்கை |
| 6. | அ.சா.ஆ.6 | 15.12.2020 | TN-65-AC-0522 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 7. | அ.சா.ஆ.7 | 28.06.2021 | TN-65-AE-9419 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 8. | அ.சா.ஆ.8 | 14.06.2020 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்:</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :</u>** இல்லை.

**<u>குறிப்பு:-</u>**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.06.29 16:17:42 +0530

உதவி அமர்வு நீதிபதி,
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.

தலைமை குற்றவியல் நடுவர்
நீதிமன்றம்,
இராமநாதபுரம்.
CC.299/2022
தீர்ப்புரை
நாள்–29.06.2026